Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTUR
CC NO.276 /**2020**

**Depostitions of PW-2 Witness for**

| | |
|---|---|
| Name | ஜசக்ராஜதுரை |
| Father's name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26th day of September 2023

Signature of Witness.

26.09.2023

எதிரி ஆஜர்

முதல் விசாரணை

நான் தற்போது கோவில் பட்டியில் குடியிருந்து தமிழ்நாடு மின்சார வாரியத்தில் இளநிலை பொறியாளராக பணிபுரிந்து வருகிறேன. அ.சா.1 பொற்செல்வி எனது மனைவியாவார் . 10 ம் தேதி மாதம் நியாபகம் இல்லை 2019 வருடம் எனது மனைவி பொற்செல்வியை திருமண நிகழ்ச்சிக்காக அனுப்பிவைத்திருந்தேன். திருமணநிகழ்ச்சியை முமுடித்துவிட்டு எனது மனைவி ஊருக்கு வருவதற்காக திருவில்லிபுத்தூர் பஸ்ஸடாப்பில் பஸ் ஏறினார். உள்ளே போய் பையில் வைத்திருந்த பிக்சாப்பர் பையை பார்த்தபோது அதில் இருந்த தங்கச்செயின் காணாமல்போயிருந்தது தெரியவந்தது. அது 4 கிராம்

செயின் ஆகும். உடனே எனக்கு போன் செய்து தகவல் சொன்னார். நான் உடனே பேருந்தில் தேடிப்பார் என்று என் மனைவியிடம் சொன்னேன். அவர் தேடிப்பார்த்து கிடைக்கவில்லை என்று சொன்னார். வீட்டிற்கு வந்துவிடு என்று சொன்னேன். வீட்டிற்கு வந்து குடும்பத்தாரிடம் கலந்து பேசியபோது போலீசில் புகார்கொடுத்தால் காணாமல்போன செயின் திரும்பக்கிடைக்கும் என்று சொன்னார்கள். அதனால் 25 ம் தேதி நாங்கள் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். 26 ம் தேதி காவல் நிலையத்தில் இருந்து எங்களுக்கு போன் வந்தது . காணாமல் போன செயின் கிடைத்துவிட்டதாக சொன்னார்கள். எனது மனைவி காவல்நிலையத்திற்கு சென்று நகையை அடையாளம் காட்டினார. நகையை நீதிமன்றத்தில் மனு செய்து திரும்பப்பெற்று கொண்டோம். யார் எடுத்தார்கள் என்று தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள செயின் எனது மனைவியின் செயின்தான். அதை எனது மனைவி கழுத்தில் அணிந்திருப்பார். அப்போது நான் பார்த்துள்ளேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

எனது மனைவி நகை காணாமல் போனது தொடர்பாக எனக்கு எப்போது தகவல் சொன்னார் என்றால் ஞாபகம் இல்லை. நகை காணாமல் போன உடன் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். என்னை இந்த வழக்கில் போலீசார் போன் மூலமாக தான் விசாரித்தார்கள். நேரடியாக விசாரிக்கவில்லை. எனது மனைவி அணிந்திருந்த 4 கிராம் எடையுள்ள பட்டைச் செயின் தான் காணாமல் போனது என்றால் சரிதான். 4 கிராம் எடையுள்ள டாலருடன் கூடிய செயின் காணாமல் போனது.என்னையையும், எனது மனைவியையும் 25.11.2019 தேதிக்கு பிறகு போலீசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் எனது மனைவி வாங்கிச் சென்ற நகை எனது மனைவியின் நகை அல்ல என்று சொன்னால் சரியல்ல